எங்கள் துறை நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த இடம் மாநகராட்சிக்குரியது என்றால் மாநகராட்சி அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு பொதுப்பணித்துறை உறுதுணையாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்வாய் சீரமைத்தல்.

*2165—திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் உள்ள பக்கின் கால்வாய் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடி நகரத்தில் மத்திய பகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் பக்கின் ஓடை தூத்துக்குடி நகரத்தில் மிகவும் சுகாதாரக் கேடான நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. முந்தைய ஆட்சிக் காலத்தில் இதைச் சீரமைக்க எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்து, அதற்கான வேலைகள் நடக்குமென்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். மீண்டும் அமைச்சரவர்கள், அந்தக் கால்வாயைச் சீரமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். தூத்துக்குடி மாவட்டத் தலைநகராக இருப்பதால் பக்கின் ஓடை சீரமைப்புப் பணி மீண்டும் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இதுவும் அதே கேள்வியைப் போலத்தான். பக்கின் ஓடை என்னும் நிலப்பகுதி பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது அல்ல. அது தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமானது.

இந்தக் கால்வாயைச் சீரமைக்க வேண்டும் என்று 1983-லிருந்து பல முறை முயற்சிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கால்வாயை முழுக்க பலர் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றினாலொழிய கால்வாயைச் சீரமைக்க முடியாது. எனவே மாநகராட்சியினர் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொடுக்கிறோம்; பொதுப் பணித் துறையினர் சீரமைத்துக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதற்காக இரு கோட்டங்களைக் கூட பொதுப்பணித் துறை அப்போது ஏற்படுத்தியது: ஆனால் ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே பொதுப்பணித் துறையும் தன் முயற்சியைக் கைவிட்டது. எனவே இந்தப் பக்கிள் ஓடை நகராட்சியைச் சார்ந்தது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பெரியசாமி : இந்த ஓடையில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை எடுத்துக் கொடுத்தால் அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நகராட்சியினர் ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொடுத்தால் அந்த ஓடை சீரமைக்கும் பணி குறித்து இலாகா பரிசீலிக்கும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் பக்கிள் கால்வாய் சீரமைக்கும் திட்டத்திற்கு, அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தூத்துக்குடியைச் சுற்றி 16 கிலோ மீட்டருக்கு தற்போது குடி இருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டா வழங்க வேண்டும் என்று வருவாய்த்துறை அறிவித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : சமீபத்தில் சிதம்பரனார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அந்தப் பக்கிள் கால்வாயில் ஆக்கிரமிப்பு செய்து இருப்பவர்களை தூத்துக்குடிக்கு அருகில் இருக்கிற மாப்பனூர் கிராமத்திலே குடி இருப்பதற்கு வருவாய்த்துறை அனுமதி அளித்தால் இந்தப் பக்கிள் கால்வாய் சீரமைப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதை அவர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டத்திலே தூத்துக்குடி அருகிலே இருக்கின்ற மாப்டனூர் கிராமத்தில் பட்டா வழங்குவதற்கு அனுமதி வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இந்தப் பதில் எந்த அமைச்சரிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பட்டா வருவாய்த்துறை அமைச்சர் கொடுக்க வேண்டியது; கேள்வி பொதுப்பணித்துறை அமைச்சருக்குச் சம்பந்தப்பட்டது என்றால் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டு வருவாய்த்துறை அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறலாம்.

திண்டுக்கல்லில் தோல் தொழிற்பேட்டை.

*551—திரு. ஏ. எஸ். தங்கராஜன் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்லில் மத்திய திட்டத்தின் கீழ் ரூபாய் 200 கோடியில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தோல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் (லெதர் காம்ப்ளக்ஸ்) தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அதனை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்ட சிறப்புப் பணிக்குழு (Task Force) தோல் தொழிற்பேட்டை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய பல்வேறு இடங்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதேயொழிய, இந்தத் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசோ, மாநில அரசோ இதுவரை ஒதுக்கவில்லை. திண்டுக்கல் பகுதியில் ஒரு தோல் வளர்ச்சி நிறுவனத்தை உருவாக்க வேண்டுமென்று தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் அதற்கான பணியைத் தற்போது தான் மேற்கொண்டு இருக்கிறது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி இந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கான இடம் தேர்வு செய்கின்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.